# கோகர்ண மஹா கணபதி

## சாந்திப்பிரியா



முன்னொரு காலத்தில் பராசக்தி மும்மூர்திகளைப் படைத்தாள். அவர்களில் ஒருவரான பகவான் பிரும்மாவை உலகைப் படைக்க வேண்டும் என கட்டளை இட்டார். பகவான் பிரும்மாவும் தனது நெற்றியில் இருந்து பகவான் ருத்திரனை படைத்தார். அப்படி வந்த

பகவான் ருத்திரனை உலகில் ஜீவராசிகளை படைக்குமாறு பகவான் பிரும்மா கேட்டுக் கொண்டாராம்.

அந்த கட்டளையை ஏற்ற பகவான் ருத்திரரும் தான் படைக்க உள்ள ஜீவன்கள் அனைத்தும் நற்குணம் பெற்று இருக்க வேண்டும் என எண்ணியவாறு பாதாள உலகத்திற்குச் சென்று அத்தகையை சக்தியை தான் பெற்றிட தவம் இருந்தார். ஆனால் அவருடைய தவக் காலம் மூன்று யுகங்களுக்கும் மேலாகத் தொடர்ந்தது என்பதினால் உலகம் படைக்கப்பட்டது துவங்கவில்லை. 'என்ன ஆயிற்று, நான் உலகைப் படைக்க அனுப்பிய பகவான் ருத்திரன் தன் தொழிலை செய்யத் துவங்கவில்லையே' என எண்ணிய பகவான் பிரும்மாவின் பொறுமை மறைந்தது. அதனால் கோபமுற்று நானே உலகைப் படைக்கின்றேன் என கிளம்பி மூன்று குணங்களைக் கொண்ட ஜீவராசிகளைத் படைக்கத் துவங்கினார்.

அதை அறிந்த பகவான் ருத்திரர் கோபத்துடன் பகவான் பிரும்மாவிடம் சண்டைப் போட பூமியில் இருந்து வெளியே வந்த பொழுது அவரது கோபத்தை அடக்க எண்ணிய பூமாதேவி அவரை தடுத்து நிறுத்தினாள். அவர் தன்னுள் இருந்து வெளி வந்த வேகத்தை தம்மால் தாங்க முடியாது என அவரிடம் வேண்டிக் கொண்டு அவரை மெதுவாகச் செல்லுமாறும், அதற்காக தன்னுடைய காதின் வழியே வெளியேறுமாறும் வேண்டினாள். ஆகவே பசு போன்ற உருவில் தன்னை மாற்றிக் கொண்டு அமர்ந்த அவளுடைய காதின் வழியாக பகவான் ருத்திரரும் பூமியை விட்டு வெளியேறிய பொழுது அவருடைய கோபம் பெருமளவு தணிந்து இருந்தது. அவர் அவளுடைய காதில் இருந்து வெளியெறியதால் கோ என்றால் பசு எனவும் கர்ணம் என்றால் காது எனவும் அர்த்தம் தரும் வகையில் அமைந்திருந்த வார்த்தையை கொண்டு ருத்திர பகவான் வெளிவந்த அந்த இடத்தை கோகர்ணம் எனப் பெயரிட்டனர்.

கோபம் தணிந்து வெளியேறிய பின்னரும் பகவான் ருத்திரனின் கோபம் முற்றிலும் அடங்கவில்லை. அவர் பகவான் பிரும்மாவைத் தேடிக் கொண்டு அவர் படைத்திருந்த ஜீவராசிகளை அழிக்கச் கிளம்பிச் சென்றார். அப்பொழுது பகவான் திருமால் அவரை வழியிலே சந்தித்து அகம விதிகளின்படி பிரளய காலத்தில் மட்டுமே அனைத்து ஜீவராசிகளையும் அழிக்க வேண்டும் என்பது ஆகம விதிமுறைகளாக (பிரபஞ்சத்தை படைத்த பரப்பிரம்மனால் தெய்வங்களுக்காக வடிவமைக்கப் பட்ட விதிமுறைகள்) இருப்பதினால் அவர் பகவான் பிரும்மா மீது இருந்த கோபத்தை மறந்து விட வேண்டும் எனக் வேண்டிக் கொள்ள சிவபெருமானும் தன்னுடைய அவதாரமான பகவான் ருத்திரருடன் தன் லோகத்துக்குத் திரும்பினார். ஆனால் அப்படி திரும்பச் சென்றாலும் தன்னை மான் உருவில் மாற்றிக் கொண்டு பகவான் பிரும்மா, பகவான் விஷ்ணு மற்றும் படைப்புக்களின் அனைத்து சக்திகளையும் உறிஞ்சி அவற்றை தம் கொம்புகளில் வைத்துக் கொண்டு கைலாயத்திற்குச் சென்று விட்டார். அதை அறிந்த அனைத்து தேவர்களும் கைலாயத்திற்குச் சென்று சிவபெருமானிடம் நடந்து விட்ட நிகழ்ச்சிகளை மறந்து மன்னித்து விட்டு தம்முடைய சக்திகளைத் திரும்பத் தருமாறு அவரிடம் வேண்டினர். சிவபெருமானும் அவர்களது கோரிக்கைகளை ஏற்று அவர்களுடைய சக்திகளை அவர்களிடம் திருப்பித் தந்த பின் தன்னுடைய பல சக்திகளை ஒரு மான் கொம்பில் வைத்து அதை சிவலிங்கமாக்கி அதற்குப் பிராண லிங்கம் எனப் பெயரிட்டார். அந்த பிராண லிங்கத்தின் சக்தியினால்தான் ஒரு முறை தேவர்கள் அசுரர்களுடன் நடந்த யுத்தத்தில் அசுரர்களை வெல்ல முடிந்தது. சிவபெருமான் பூமியின் காதில் இருந்து வெளியேறிய இடத்தையும், திருமால் அவருடைய கோபத்தை அடக்கிய இடத்தையும் சேர்த்து அந்த இடம் ருத்திர பூமி எனப் பெயர் பெற்றது. அங்கு சென்று இறப்பவர்கள் மோட்சத்தை

அடைவார்கள் என அருள் புரியப்பட்டது. அதனால் அதற்கு சித்த பூமி என்ற இன்னொரு பெயரும் ஏற்பட்டது.

ஆனால் பகவான் பிரும்மா படைத்த பகவான் ருத்திரரைப் பற்றிய இன்னொரு கதையும் உள்ளது. அதன்படி பகவான் பிரும்மா தன்னுடைய நெற்றியில் இருந்து பகவான் ருத்திரனை படைக்க அப்படி வெளிவந்த பகவான் ருத்திரர் முதலில் அர்தநாரீஸ்வரர் உருவில் வந்ததாகவும், அதன் பின் பகவான் ருத்திரர் தன்னைப் போன்ற பல கணங்களை உருவாக்கினார். தன் நெற்றியில் இருந்து வெளி வந்த பகவான் ருத்திரனே உலகைப் படைக்கச் சிறந்தவர் என எண்ணிய பகவான் பிரும்மா அவரிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்த பொழுது, பகவான் ருத்திரர், தான் பிறந்தது பகவான் பிரும்மா படைக்கும் ஜீவராசிகளின் காலத்திற்கேற்ப அவற்றை அழிப்பதற்கே எனவும், அப்படி செய்யாவிடில் இவ்வுலகில் பெருகிக் கொண்டே இருக்கும் ஜீவன்கள் தங்க இடம் இன்றிப் போய்விடும் எனவும் கூறினாராம். அது மட்டும் அல்ல அர்த நாரீஸ்வரரை பார்த்த பொழுதுதான் பகவான் பிரும்மாவுக்கும் ஆண் பெண் தத்துவம் என்ன என்பது புரிந்ததாகவும், அதனால்தான் அவர் படைப்பில் ஆண் பெண் என்ற இரு பிரிவுகளை அவர் படைத்தார் என்பதாகவும் ஒரு செய்தி உள்ளது. பகவான் பிரும்மாவின் படைப்புக்களும் பெருகிக் கொண்டே செல்லாத துவங்கின.

இதற்கு இடையே பெரிய சிவ பக்தையான இராவணனின் தாயார் தன்னுடைய மகன் எவராலும் அழிக்க முடியாத பெரும் பலசாலியாக இருக்க வேண்டும் என்பதற்காக சிவபெருமானின் பிராண லிங்கம் தனக்கு வேண்டும் என வேண்டிக் கொண்டு கடலருகில் அமர்ந்தவாறு தினமும் சிவலிங்கத்திற்கு தொடர்ந்து பூஜைகள் செய்து கொண்டு இருந்தாள். அவள் பூஜை நிறைவு பெற்று விட்டால் அனைவரின் வாழ்க்கையும் வீணாகிவிடும் என பயந்து போன கடல் மன்னன் அந்த சிவலிங்கத்தை கடலுக்குள் இழுத்துச் சென்று அழித்து விட்டார்.

அதனால் தாயார் அடைந்த வருத்தத்தைக் கண்ட இராவணன், கைலாயத்தில் உள்ள அந்த பிராண லிங்கத்தை தானே கொண்டு வருவதாகக் கூறி விட்டு, கைலாயத்தை அடியோடு பெயர்த்து எடுத்து வர முயன்றான். அதனால் கைலாயமே அதிர்ந்தது. பயந்து போன பார்வதியும் பிற தேவர்களும் சிவபெருமானிடம் ஓடிச் சென்று இராவணனின் செயலைக் குறித்து கூறினர். கைலாயத்தை பெயர்க்க முயன்று கொண்டு இருந்த இராவணனின் கைகளையும் தலையையும் மலையின் அடியில்இருக்கும்போது சிவபெருமான் மலையை அழுத்த, வலியினால் துடித்த இராவணன் சிவபெருமானிடம் மன்னிப்புக் கோரி தன்னை விடுவிக்குமாறு வேண்டினான். அவரும் மனமிரங்கி அந்த மலையை தூக்கி விட்டார். வெளியில் வந்த இராவணன் சற்றும் தாமதிக்காமல் தன் ஒரு தலையை வெட்டி, கைகளில் இருந்து உருவி எடுத்த நரம்புகளைக் கொண்டு அவற்றினால் ஒரு வாத்தியக் கருவியை செய்து சாமவேத கான பாடல்களைப் பாடி சிவனைத் துதித்தான். என்ன இருந்தாலும் தன்னுடைய பக்தனின் வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பவர்தான் சிவபெருமான். அவன் முன் தோன்றி என்ன வேண்டும் எனக் கேட்க அவனும் தயங்காமல் தன்னுடைய தாயாரின் விருப்பத்தைக் கூற அவர் சற்றும் யோசிக்காமல் இராவணனுக்கு பிராண லிங்கத்தைக் கொடுத்து விட்டார். கொடுத்தப் பின் ஒரு முக்கிய நிபந்தனை போட்டார். அவன் எடுத்துச் சென்று அவனுடைய தாயார் விரும்பிய இடத்தில் அதை வைக்க வேண்டும். அந்த பிராண லிங்கத்தை எடுத்துச் செல்லும் வழியில் தப்பித் தவறி வேறு எங்காவது கீழே வைத்து விட்டால் அதை வெளியே எடுக்க முடியாது. அதன் பயன் அவனுக்குக் கிடைக்காது.

சிவலிங்கத்தை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்த இராவணன் தன் நாட்டை அடைந்து அதை பிரதிஷ்டை செய்து விட்டால் அவனை எவராலும் வெல்ல முடியாது என பயந்து போன தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர். அவரும் வர இருந்த

ஆபத்தைப் பற்றி அறிந்து கொண்டார். உடனே அனைவரையும் அழைத்துக் கொண்டு விநாயகரிடம் சென்று அவர்தான் அதற்கு ஒரு நல்ல முடிவு காட்ட வேண்டும் எனவும், இராவணன் அந்த லிங்கத்தை தன்னுடைய நாட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாமல் அவனைத் தடுக்க வேண்டும் எனவும் அவரிடம் கேட்டனர்.

அவர்களுடைய கவலையை தான் தீர்ப்பதாகக் கூறிய விநாயகரும் முதலில் வருண பகவானை இராவணனின் வயிற்றுக்குள் சென்று இம்சை செய்யுமாறு கூறினார். வருணனும் இராவணனின் வயிற்றை தண்ணீரால் நிறப்பினார். இராவணனுக்கு அவசரமாக சிறு நீர் கழிக்க வேண்டி வந்தது. லிங்கத்தை எங்கே வைப்பது என்று எண்ணிக் கொண்டு இருந்தபோது விநாயகர் ஒரு அந்தணர் உருவில் சென்று இராவணனை சந்தித்தார். அவரைக் கண்டு மனம் மகிழ்ந்த இராவணன் அவரிடம் அந்த லிங்கத்தை பிடித்துக் கொண்டு நிற்குமாறு வேண்டிக் கொண்டு சிறுநீர் கழிக்கச் சென்றான். இராவணன் தான் அவனிடம் குறிப்பிட்டிருந்த நேரத்துக்குள் திரும்பாததைக் கண்டு அந்தணர் உருவில் இருந்த விநாயகர் அந்த லிங்கத்தை பூமியில் வைத்து விட்டார். கோபமற்று திரும்பி ஓடி வந்த இராவணன் விநாயகரின் தலை மீது ஓங்கி அடித்து விட்டு அந்த லிங்கத்தை பூமியில் இருந்து பெயர்த்து எடுக்க முயன்றான். அதை எடுக்க முடியவில்லை. விநாயகரும் மறைந்து விட்டார். கோபமுற்று சிலவிங்கத்தின் மீதிருந்த அனைத்தையும் தூக்கி எறிய அந்த பொருட்கள் விழுந்த ஐந்து இடங்களில் சிவலிங்கங்கள் தோன்றின. இப்படியாக ஐந்து இடங்களில் சிவலிங்கங்கள் தோன்ற அது பஞ்ச லிங்க பூமி எனவும், அவன் இழுத்த வேகத்தில் சிவலிங்க உருவம் பசுவின் காதைப் போல ஆனதினால் அந்த இடத்திற்கு கோகர்ணம் என பெயர் வந்தது எனவும் இன்னொரு காரணத்தை கூறுகின்றனர்.

அதன் பின் லிங்கத்தை தான் பிரதிஷ்டை செய்து விட்டிருந்த இடத்தில் பகவான் விநாயகரும் சென்று அமர்ந்தார். பகவான்

ருத்திரரும் மனம் மகிழ்ந்தார். பகவான் ருத்திரர் பூமியில் இருந்து வெளி வந்த அந்த இடத்தில் பகவான் வினாயகர் பிரதிஷ்டை செய்ததினால் அந்த இடத்திற்கு சென்று பகவான் வினாயகரை வணங்கிய பின் பகவான் சிவனை பூஜித்தால் மோட்சம் அடைவார்கள் என்ற நம்பிக்கை தோன்றியது.

# Gokarna Maha Ganapathi Temple

## Santhipriya



When cosmic was created Goddess Parasakthi released trinities and commanded one amongst them, Lord Brahma to create the Universe.

Lord Brahma, immediately released Lord Rudra from his forehead and instructed him to create living beings in the universe.

Lord Rudra before commencing creation wanted to get supernatural divine powers to create entire humans with high virtues and therefore sat in penance to get such divine power. Since his penance continued beyond three yugas, no sign of creations were seen. Lord Brahma was worried that even after releasing Lord Rudra from him, there was no trace of creations in the universe and therefore got annoyed and began to create one creature by himself with three aspects.

When Lord Rudra awakened from his tapas and saw the creatures, he angrily came out from inside the earth to fight with Lord Brahma, but Goddess Bhooma Devi in order to cool down the temper of the Lord, blocked him praying that she was unable to withstand the pressure which fell on her as Lord Rudra ran so fast and therefore requested him to slow down his exit by passing through her ear. Lord Rudra agreed and started getting out through the ears of Goddess Bhooma Devi when she converted herself into that of a holy Cow. By the time Lord Rudra exited from her ear, his anger had almost vanished. Thereafter the place where this drama happened began to be called Gokarnam. Go meant Cow and Karnam meant Ear.

Lord Rudra's anger did not subside even after he left there. He set out in search of Lord Brahma to destroy the creatures he had

created. On way Lord Vishnu met Lord Rudra to douse his anger by drawing his attention over the norms set in Agama (norms created by Parabrahman when the divines were created) that he could only destroy the creatures  during deluge when entire cosmic would reborn again and not before. He requested him to remove the feeling of revenge from his mind on Lord Brahma. However even though Lord Shiva accepted his request and returned to Kailash, he transformed himself into that of a deer and absorbed the powers of Lord Vishnu and other devaganas and hid them into his horns. When the devaganas and other divines came to know of the fact, they went to Kailash and pleaded with Lord Shiva to give them back the powers which had been taken away by Lord Shiva. Accepting their request Lord Shiva returned back their powers and filled the remaining powers into the horns (deer) and converted it into a powerful Shiva Ling called Prana Ling. It was only by the power of the Prana Ling that the celestials were able to defeat the asuras in a battle that ensued. The place where Lord Shiva in the form of Lord Rudra came out of the ears of the Cow, and the place where Lord Vishnu defused the anger of Lord Rudra came to be called as Rudra Bhoomi and also as Siddha Bhoomi. It became firm belief that those who die in that space would reach heaven.

There is another story about manifestation of Lord Rudra from the forehead of Lord Brahma.  According to the lore Lord Rudra first came out in the form of Arthanarisvara (a divine with male and

female) and created several divine ganas looking similar to him (Lord Rudra). When Lord Brahma requested Lord Rudra to create creatures in the universe, Lord Rudra brought to the attention of Lord Brahma that his manifestation (Lord Rudra's) was meant to destroy the creatures created by Lord Brahma whenever their period of life ended, lest there would be no space in the universe for the creatures to live. Only after Lord Brahma saw divine Arthanarisvara, he got the clue that the creations he proposed to create should be both male and female. Lord Brahma continued with the work of creation.

Ravan's mother was a great devotee of Lord Shiva. She sat on the bank of the ocean and performed daily Pooja seeking Prana Ling for her son. She felt that once she received it could be gifted to Ravan who would become invincible in the universe. Fearing that if Ravan's mother succeeded in getting the Prana Ling it would be detrimental to the interest of the universe, the king of the ocean dragged the Shiva lingam into the sea and destroyed it. Seeing the grief of his mother, Ravana promised to get the Prana Ling from Kailash, went there and attempted to lift the entire Kailash. In the act entire Kailash mount shook and caused fear in everyone's mind. Frightened, Goddess Parvati and the other deities ran to Lord Shiva and told him about Ravan's attempt. Immediately when Lord Shiva pushed the Kailash down when Ravan's legs and hands were below the mount. When Lord Shiva pressed the mount, his hands and legs

got struck below causing immense pain to him. When he could not move his hands and legs, he sought pardon from Lord Shiva and seeing the agony of his devotee Lord Shiva lifted the mount again to release Ravan's hands and legs. Ravan was too intelligent. He cut off one of his heads and made a musical instrument out of the veins that had sprung from his hands and played music –samaveda- in praise of Lord Shiva. Lord Shiva was weak in one aspect. He would get pleased with his devotees if they wholeheartedly and sincerely prayed to him. He accordingly appeared before him and conceded to his request to give him the Prana Ling for his mother. But he laid out a condition that till he gave it to his mother and placed where she wanted to install, it should not be placed on the ground for any reason. In case if he placed it on ground anywhere, he would not be able to lift it forever.

Fearing that no one would be able to defeat Ravana, if he succeeded in taking it to his country the celestials went to Lord Vishnu and appealed to him to somehow prevent Ravan from carrying the Prana Ling to Sri Lanka. Lord Vishnu too was aware of the consequences if Ravan was allowed to carry the Prana Ling to Sri Lanka. Therefore everyone went to Lord Ganesha and requested him to do something to prevent Ravana from taking Prana Ling to his country.

Lord Ganesha assured that he would solve their worries and first told Lord Varuna to ensure Ravan's stomach get filled with water Immediately Lord Varuna made the weather very chill thereby

ensuring the bladder of Ravan filled with urine which compelled Ravana to urinate urgently. When Ravan was searching for someone to keep the Prana Ling till he passed urine, Lord Ganesha appeared before him in the guise of a Brahmin priest and offered to keep it till he returned back after urinating. Happily Ravan requested him to hold the ling and went to urinate. When Ravan did not return back within the prescribed time limit set by Lord Ganesha in disguise of a Priest, he placed the Ling on the ground. Ravan ran back angrily and hit Lord Ganesha on the head and tried to remove the Prana Ling from the ground, but he couldn't take it out. By the time Lord Ganesha too disappeared. Angrily Ravan took out everything found on the Shiva Ling and threw them around which fell on five places. Wherever those materials fell, they became five Shiva Lings. Because five Shiva Lings appeared on the ground around Gokarnam it became to be called Pancha (five) Ling Bhoomi. The main entrenched Prana Ling which Ravan tried pull out turned to the shape of an ear of the cow and therefore the place also came to be called Gokarnam so says another folklore.

Lord Ganesha then went and enshrined himself where he had consecrated the Prana ling. Lord Rudra was pleased. Those who visit the temple and pray at the place where Lord Rudra came out of the ears of the Goddess Earth and where the Prana Ling was consecrated by Lord Vinayaga, they would be blessed to go to

heaven. However it is necessary that one has to first offer prayers to Lord Ganesha and then only offer prayers to the Shiva Ling.